**வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் (CEDPL)**

**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

# வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு பதிவு செய்த மாணவர்களிடமிருந்து பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு, பரீட்சை விண்ணப்பங்கள் கோரல் - 2014 / 2015

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி, வியாபார நிர்வாகமாணி மற்றும் வணிகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு பதிவு செய்துள்ள மாணவர்களிடமிருந்து **(2014 / 2015 இற்கான கல்வியாண்டு - புதிய பாடத்திட்டம்)** முதலாம் வருட, முதலாம் பருவ (1st year, 1st Semester) கருத்தரங்கு மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் **30.05.2016** வரை கோரப்படுகின்றன.

1. **விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல்**

   விண்ணப்பப் படிவங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்:

   - இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.seu.ac.lk/cedpl/) இதனை பதிவிறக்கம் செய்தல்
   - தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தில் நேரடியாகப் பெறல்
   - தபால் மூலமாக பெற்றுக்கொள்ள விரும்புவோர். ரூபா 40/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு சுயவிலாசமிடப்பட்ட 9”X4” அளவிலான தபாலுறையை அனுப்புவதன் மூலம் 21.05.2016 வரை பெற்றுக் கொள்ளல். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பாடநெறிக்கான பதிவு இலக்கத்துடன் “கருத்தரங்கு, பரீட்சைக்கான விண்ணப்பம்” எனவும் அவசியம் குறிப்பிடல் வேண்டும் (உரிய பரீட்சையின் பெயரைக் குறிப்பிடவும்)

2. **பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

   Assistant Registrar,
   Centre for External Degrees & Professional Learning (CEDPL)
   South Eastern University of Sri Lanka
   Oluvil # 32360

3. **விண்ணப்பதாரிகளின் கவனத்திற்கு:**

   - பரீட்சைகளுக்கு முன்னர் பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு நடைபெறும். இவை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (ஒலுவில்), மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மாத்திரம் நடைபெறும். விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து கருத்தரங்கு நிலையங்கள் மாறுபடும். வணிகமாணி கற்கைநெறிக்கான கருத்தரங்குகள் யாவும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலேயே நடைபெறும்.
   - இக்கருத்தரங்கில் தொடர் மதிப்பீடு நடாத்தப்பட்டு (Continuous Assessment) ஒவ்வொரு பாடத்துக்குமான மொத்தப் புள்ளியில் 30 வீதமான புள்ளிகள் இத்தொடர் மதிப்பீட்டுக்கு வழங்கப்படும்.
   - பரீட்சைகள் யாவும் அம்பாறை மாவட்டத்திலேயே நடைபெறும் (தென்கிழக்குப் பல்கலைக் கழகம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நிலையங்கள்).
   - இக்கருத்தரங்கிற்கு மாணவர்களின் **வரவு மிக அத்தியாவசியமாகும்**. இதில் மாணவர்களுக்கான கற்கை நெறிக் கையேடுகளும் (Course Manuals) தொடர் மதிப்பீட்டு வினாக்களும் வழங்கப்படும்.

- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் **30.05.2016** வரை ஏற்றுக் கொள்ளப்படும். பூரணப்படுத்தப்படாத, மற்றும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**4. கட்டண விபரம்:**

| **வெளிவாரிப் பட்டப்படிப்பு** | **கட்டணம் (ரூபா)** |
|---|---|
| கலைமாணி | 7,500.00 |
| வியாபார நிர்வாகமாணி | 17,500.00 |
| வணிகமாணி | 17,500.00 |

முதலாம் வருட முதலாம் பருவ கற்கைநெறிக் கையேடு, கருத்தரங்கு, பரீட்சை போன்றவற்றுக்கான சகல கட்டணங்களும் இதில் அடங்கியிருக்கின்றன.

மேலதிக தொடர்புகளுக்கு: 067-2052 801

பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
03.05.2016